சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம் - 2025

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களானது நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிதியத்தினை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் சபையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகள் என்பவற்றை வெளிப்படுத்துதல் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 106,356,702 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 324,154,748 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 430,511,450 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2025 செப்தெம்பர் 04 ஆந் திகதிய அமைப/25/1531/804/179 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட 2024 இன் 44 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தின் VIII ஆம் பகுதியின் 39 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட நியதிச்சட்டமற்ற நிதியம் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட நிதிய மீளாய்வு குழுவின் 2025 யூலை 02 ஆந் திகதிய அறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் இந்த நிதியம் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் இந்த அறிக்கைத் திகதி வரையும் தொடர்புபட்ட சட்ட நடைமுறை முடிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	சட்டமா அதிபரிடம் விசாரித்து உரிய தீர்மானம் கிடைத்துள்ளதுடன் இது தொடர்பாக அரசாங்க நிதி திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. திணைக்களத்தின் இந்த நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்காக திணைக்களத்தின் கணக்காய்வு முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடப்பட்டதற்கு ஏற்ப நியமிக்கப்பட்ட விசேட குழுவின் மூலம் இந்த நிதியம் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.	2024 இன் 44 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் பிரகாரம் உரிய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள காலப்பகுதி முடிவடைந்துள்ளதனால் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் மற்றும் உரிய சட்ட ரீதியான தேவைப்பாட் டினை கவனத்திற்கு எடுத்து இந்த நிதியம் சம்பந்தமாக எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படுதல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மீளாய்வாண்டில் விசேட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 911 வீடுகளுக்காக முதலாவது கட்டத்தின் ரூபா 136,650,000 நிதி ஏற்பாட்டினை உள்ளடக்கி மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு மேலதிகமாக ரூபா 1,400,000 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் அதில் ரூபா 13,350,000 நிகழ்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படாததன் காரணமாக மீள தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. மேலும் 2024 ஆம் ஆண்டின் போது 1,377 வீடுகளுக்காக ரூபா 662,600,000 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 918 வீடுகளுக்காக ரூபா 123,050,000 மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவுகள் ரூபா 539,550,000 ஆல் அல்லது 81 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான சுற்றறிக்கையினை 2025 ஆகஸ்ட் மாதத்தின் போது வழங்குதல் மற்றும் நிதி ஏற்பாட்டினை நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது விடுவித்தலின் காரணமாக மீளாய்வாண்டில் வீடமைப்பு நிகழ்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது வீடமைப்பு நிகழ்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு மார்ச் மாதத்தின் போது நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன் இந்த ஆண்டின் போது வீட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட குடும்பங்களை தெரிவுசெய்யும் வரை சுற்றறிக்கையினை வழங்குவதனை தாமதித்தல் இடம்பெற்றுள்ளது. அதற்கிணங்க மேம்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட குடும்பங்கள் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அதேவேளை பெற்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2025 ஆகஸ்ட் மாதத்தின் போது சுற்றறிக்கை வழங்கப்பட்டது. அதன் பின்னர் சுற்றறிக்கையானது மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் அடி மட்டங்களுக்கு வழங்கி வீட்டு பிரேரணைகளை தெரிவுசெய்து சிபாரிசுகளைப் பெற்று தலைமை அலுவலகத்தின் மூலம் வீட்டுப் பிரேரணைகளை பரீட்சித்துப்பார்த்து பொருத்தமான பிரேரணைகளை தெரிவு செய்ததன் மூலம் வீடமைப்பு லொத்தருக்கு பொறுப்பான சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அதற்கிணங்க நிதியை விடுவித்தல் 2025	வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை பொருத்தமான முறையில் அமுல்ப்படுத்துவதற்காக தேவையான சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டிகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் வழங்குவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு போதியளவு காலம் கிடைக்கும் வகைபயில் நிதி ஏற்பாட்டினை விடுவிப்பதற்கும் முகாமைத்துவ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது இடம்பெற்றது. 911 வீடுகளுக்காக பணம் விடுவிக்கப்படதுடன் “திட்வா” சூறாவளியின் காரணமாக மீண்டும் 100 வீடுகளின் பணம் தலைமை அலுவலகத்தின் வீடுகள் கணக்கிற்கு செலவுவைக்கப்பட்டது. ஏனைய ஆண்டுகளைப் போல வீடமைப்பு நிகழ்சித்திட்டத்திற்கு அதிக அளவான வீடுகளை நிர்மாணிப்பதற்கு போதிய அளவான பணம் கணக்கில் வைப்புச் செய்யப்படவில்லை. அந்த வீடுகள் ஒரு பிரதேச செயலகப் பிரிவிற்கு 03 வீதம் 1020 வீடுகளாகவும் சில மேன்முறையீடுகளின் படியும் 2025 ஆம் ஆண்டிலிருந்து வழங்குவதற்கு வீடமைப்பு லொத்தருக்கு பொறுப்பான சபை கலந்துரையாடியுள்ளது. இதன் போது வீடமைப்பு நிதி குறைவடைந்துள்ளதனால் அடுத்துவரும் சில ஆண்டுகளுக்கு இந்த வகையிலேயே வீடுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	
(ஆ)	எம்பிலிபிட்டிய பிரதேச செயலக பிரிவில் 07 வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் திருத்தம் செய்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 3,750,000 வழங்கப்பட்டிருந்தது.		
(i)	2024 பெப்ரவரி 07 ஆந் திகதிய 2024/03 ஆம் இலக்க சமூர்த்தி சுற்றறிக்கையில் 01 நிகழ்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதன் கீழ் 3 II “தெரிவு செய்யும் நடைமுறைக்கு” இணங்க வீட்டினை	ஒரு நலன்பெறுனருக்கு ரண்விமன வீட்டுத்திட்டத்திற்காக ரூபா 750,000 பணம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு அவரின் பெயரில் காணிப் பதிவாளர்	அடுத்துவரும் ஆண்டின் போது நிதியத்தின் பிரதான செயற்பாடான வீட்டினை நிர்மாணிப்பதற்கு தேவையான உதவிகளை வழங்கும் போது சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள

	நிர்மாணிப்பதற்காக தம்மிடம் ஒரு காணி சொந்தமாக உள்ள ஒரு குடும்பம் தெரிவுசெய்யப்பட வேண்டிய போதிலும் ஒரு நலன்பெறுனரின் வீட்டினை நிர்மாணிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட காணிக்கு சட்டரீதியான உரித்து ஆவணம் இல்லாதிருந்ததுடன் இன்னுமொரு நலன்பெறுனரின் வீடு மஹவெலி அதிகாரசபைக்குச் சொந்தமான ஒரு காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்யும் போது சுற்றறிக்கையில் குறிப்பிட்ட தகைமைகள் போதியளவில் உறுதிப்படுத்தப்படாதிருந்ததன் காரணமாக தெரிவுசெய்யும் நடைமுறையின் வெளிப்படைத்தன்மை தொடர்பாக சிக்கலான நிலைமை காணப்பட்டது.	அலுவலகத்தினால் வழங்கப்பட்ட 19 ஆம் பிரிவின் 04 ஆம் உப பிரிவின் கீழ்ான மானிய பத்திரத்தின் மூலம் தொடக்க காணியில் ஒரு பகுதி கிடைத்துள்ளது என உறுதிப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க 2024/3 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் முறைப்படியாக உரிமை ஒப்படைக்கப்பட்டுள்ள காணியின் உரிமை ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு நலன்பெறுனருக்கு வீட்டுப் பிரேரணை மேன்முறையீட்டு வீடு ரூபா 750,000 இன் கீழ் இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. அக்காணி மஹவெலி அதிகாரசபைக்குச் சொந்தமான ஒரு காணி என மஹவெலி அதிகாரசபையின் ஒரு கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2024/03 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உரிமை இல்லாதிருந்த போதிலும் உரிய இணக்கப்பாட்டின் அடிப்படையில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.	அறிவுறுத்தல்களுக்கு இணங்க நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்வதற்கும் அதற்கிணங்க காணிகளின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர் நிதியை பெற்றுக்கொளவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிர்வரும் காலங்களில் நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
(ii)	மேற்கூறிய சுற்றறிக்கைக்கு இணங்க 2024 நவம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் வீடுகளை நிர்மாணித்தலினை பூர்த்திசெய்ய வேண்டிய போதிலும் ஒரு நலன்பெறுனருக்கு ரூபா 750,000 வீட்டு உதவி வழங்கப்பட்டிருந்தும் வீட்டின் பெரிய அத்திவாரம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி நிர்மாண நடவடிக்கைகள்	ஒரு நலன்பெறுனருக்கு மேன்முறையீட்டின் கீழ் ரூபா 750,000 வீட்டு உதவி வழங்கப்பட்டுள்ளது. இப்பணம் 03 தவணைகளின் கீழ் ரூபா 250,000 வீதம் 2024 நவம்பர் 20 ஆந் திகதி 2025 சனவரி 31 ஆந் திகதி மற்றும் ஏப்ரல் 11 ஆந் திகதி மாவட்டத்திற்கு பணம் விடுவிக்கப்பட்டுள்ளது. 2024 நவம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர்	வீட்டு உதவிகளை வழங்கும் போது சுற்றறிக்கையில் குறிப்பிட்ட காலப்பகுதி மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என உறுதிப்படுத்துவதற்காக காலரீதியான பின்தொடர் நடவடிக்கை மற்றும் கண்காணிப்பு நடைமுறைகள்

	மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க வழங்கிய உதவி எதிர்பார்த்த குறிக்கோள்களுக்கு உரிய காலத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பொதுவாக மாவட்டத்தில் அமுல்ப்படுத்தப்பட்ட வீடுகள் நிர்மாணிக்கும் நடவடிக்கை முடிவு செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சமுர்த்தி வங்கியில் அவரின் பெயரில் உள்ள கணக்கில் ரூபா 50,000 பணம் வைத்திருக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளதனால் அப்பணம் வீட்டின் வேலைகளை முடிவுசெய்து 2026 மே 15 ஆந் திகதிக்கு முன்னர் விடுவிப்பதற்காக மாவட்ட பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	செயற்படுத்தப்பட வேண்டியதுடன் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியல் நிர்மாண வேலைகளை பூர்த்திசெய்யாத நலன்பெறுனர்கள் சம்பந்தமாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	மேற்கூறிய நிகழ்சித்திட்டத்தின் கீழ் ஒரு வீட்டினை நிர்மாணிப்பதற்காக ரூபா 250,000 பணத்தை பெற்ற குறித்த ஒரு நலன்பெனர் அப்பணத்தில் பாரிய அளவிலான ஒரு வீட்டிற்கு அத்திவாரத்தினை மாத்திரம் நிர்மாணித்திருந்ததுடன் வீட்டின் மிகுதி வேலைகளை ஆரம்பித்திருக்கவில்லை. அதற்கிணங்க இந்த நிகழ்சித்திட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்ட ரூபா 250,000 பணம் ஒரு விளைவற்ற செலவாக இருந்தது. மேலும் வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பான வரையறையின் கீழ் 04 குடும்ப அங்கத்தவர்கள் இருக்க வேண்டியதுடன் கண்டிப்பானதுடன் ஒரு விதவைக் குடும்பமாக இருத்தல் அல்லது ஊனமுற்ற நபர் குடும்பத்தில் இருத்தல் அல்லது பொருளாதார மட்டத்தினை கவனித்து	நலன்பெறுனரின் குடும்பத்தில் இரண்டு அங்கத்தவர்கள் இருப்பதனால் அவர்களுக்கு வாழ்வதற்கு ஒரு வீடு இல்லாததனால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டினை கவனித்து பார்த்து வீடமைப்பு லொத்தருக்கு பொறுப்பான சபையின் அங்கீகாரத்தில் ரூபா 250,000 பணம் விடுவிக்கப்பட்டுள்ளது. அவதானிப்பு சுற்றுப்பயணத்தின் போது அவதானிக்கப்பட்டவாறு அப்பணத்தை பயன்படுத்தி 03 அறைகள், வறாந்தை மற்றும் சமையலறையாக அத்திவாரம் இடம் பட்டிருந்தது. வீட்டின் மிகுதி வேலைகளையும் பூர்த்திசெய்வதற்கு அவரினால் பணத்தை வேண்டி மீண்டும் வேண்டுதல் செய்திருந்தும் குடும்பத்தில் இரண்டு அங்கத்தவர்கள் மாத்திரம் இருத்தல் மற்றும் வீட்டு நிதியத்தின் நிதி ஏற்பாடு	வீட்டு உதவிகளை வழங்கும் போது உரிய சுற்றறிக்கைக்கு இணங்க நலன்பெறுனரின் முழுத் தகமைகளையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் உதவிகளை வழங்கியதன் பின்னர் நிர்மாண நடவடிக்கைகளை காலரீதியாக மேற்பார்வை செய்து வழங்கிய பணம் எதிர்பார்த்த குறிக்கோள்களுக்காக வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றது என உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் முறைப்படியான ஒரு வேலைத் திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும்.

	பார்க்கும் போது அதிக வறுமையுள்ள ஒரு குடும்பத்தினை தெரிவு செய்தல் மிகவும் பொருத்தமானது என காட்டப்பட்டிருந்தும் அக்குடும்ப நலன்பெறுனர் மற்றும் அவரின் கணவர் ஆகிய இருவரினை மாத்திரம் அக்குடும்பம் உள்ளடக்கியுள்ளது என அவதானிக்கப்பட்டது.	மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் என்பதன் காரணமாக மீண்டும் அதற்காக பணம் விடுவிக்கப்படவில்லை. அதிக வறுமையின் காரணமாக நலன்பெறுனர் வெளிநாடு சென்றுள்ளதுடன் வீட்டின் நிர்மாண வேலைகள் முடியுமான அளவு விரைவாக பூர்த்திசெய்யப்படும்.

(இ) நிவிதிகல பிரதேச செயலக பிரிவில் 03 வீடுகளை நிர்மாணிப்பதற்காகவும் ஒரு வீட்டினை திருத்தம் செய்வதற்காகவும் ரூபா 2,000,000 செலுத்தப்பட்டிருந்தது.

(i)	ஒரு உத்திரோயகத்தருக்கு வீட்டினை நிர்மாணிப்பதற்காக ரூபா 250,000 வழங்கப்பட்டிருந்தும் கணக்காய்வு செய்த சந்தர்ப்பம் வரை வீட்டினை நிர்மாணித்தல் பூரணப்படுத்தப்படாதரிருந்ததுடன் ஒருவரும் குடியிருக்கவில்லை. மேலும் வீட்டின் நிர்மாண நடவடிக்கைகளை முடிவுசெய்வதற்கு முன்னர் முழுமையான உதவிப்பணமும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் வீட்டினை நிர்மாணிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட காணி நலன்பெறுனருக்கு சொந்தமான காணியாக இருக்கவில்லை. அதற்கிணங்க நலன்பெறுனரின் காணி உரிமை மற்றும் நிர்மாண வேலைகளின் செயல்முன்னேற்றம் போதியளவில் உறுதிப்படுத்தப்படாது உதவிப் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது.	ஜயவிமன வீடுகளை வழங்குவதன் கீழ் ரூபா 250,000 பணம் ஒரு நலன்பெறுனருக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான வீட்டின் வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு தாமதித்தமையானது கணவன் மனைவி பிரச்சினையின் அடிப்படையில் என பிரதேச செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது. அதற்கு மத்தியில் அவர்களை அழைத்து குடும்பத்தில் உள்ள பிரச்சினையான நிலைமையை தீர்த்துவைத்துக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. தந்தைக்குச் சொந்தமான காணியில் வீட்டினை நிர்மாணிப்பது தொடர்பாக உரிமையை தனது எல்லையுடன் தெரிவித்து பிரிவின் கிராம உத்தியோகத்தரின் முன்னிலையில் விருப்பத்தினை தெரிவித்து ஒரு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.	நிர்மாண வேலைகளின் செயல்முன்னேற்றத்திற்கு நேரொத்ததாக தவணைப் பணத்தை விடுவிப்பதற்கும் வழங்கிய உதவியானது எதிர்பார்த்த குறிக்கோள்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது என்பதனை காலரீதியான கண்காணிப்பின் மூலம் உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)	மேற்கூறிய நலன்பெறுனர்களுக்கு மத்தியில் ஒரு நலன்பெறுனருக்கு வீட்டினை திருத்தம் செய்வதற்காக ரூபா 250,000 உதவிப் பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய திருத்தம் செய்யும் நடவடிக்கை பூரணப்படுத்தாது இருந்தும் இறுதித் தவணைப் பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க திருத்தம் செய்யும் நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றத்தை போதிளவில் உறுதிப்படுத்திக்கொள்ளாது தவணைப் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது.	ஒரு நலன்பெறுனவரின் வீட்டினை திருத்தம் செய்வதற்காக ரூபா 250,000 வீட்டு உதவி வழங்கப்பட்டிருந்தது. அந்த வீட்டு பிரேரணையானது கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குப் பொறுப்பான சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக அபிவிருத்தி உதவியாளர் சமூக அடிப்படை வங்கி முகாமையாளர், சமூக அடிப்படையிலான வங்கி சங்க முகாமையாளர், தலைமை அலுவலக முகாமையாளர் பிரதேச செயலாளரின் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளரின் சிபாரிசின் அடிப்படையில் சமூர்த்தி வீடமைப்பு லொத்தர் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் அங்கீகாரத்தின் பின்னர் வழங்கப்பட்டதாகும். அந்த வீட்டினை திருத்தம் செய்யும் நடவடிக்கையினை மேற்கொள்ளும் போது மிகவும் சிக்கலான ஒரு வீதியில் வசதிகள் இல்லாமை மற்றும் பொருளாதார நிலைமை மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டதனால் வழங்கிய ரூபா 250,000 பணத்திற்கு அவர்களிடம் இருந்த ஒரு பழைய கதவினை திருத்தம் செய்து மீண்டும் பொருத்துதல் மேற்கொள்ளப்பட்டது.	வீட்டினை நிர்மாணித்தல் மற்றும் திருத்தம் செய்வதற்காக வழங்கிய உதவிப் பணத்தை விடுவிக்கும் போது உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க ஒவ்வொரு கட்டத்தின் செயற்பாடுகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தியதன் பின்னர் தவணைப் பணத்தை விடுவிப்பதற்கும் அதற்காக முறையான கண்காணிப்பு மற்றும் பின்தொடர் நடைமுறையினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	தெரிவுப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட மேற்கூறிய வீடுகளுக்கு மத்தியில் இன்னும் ஒரு நலன்பெறுனருக்கு ரூபா 750,000 உதவிப் பணம் முழுமையாக விடுவிக்கப்பட்டிருந்ததும் மீளாய்வாண்டின் இறுதி	இது 2024 ஆம் ஆண்டிற்கான ஒரு வீட்டுத் திட்டமாகும். ஒட்டுமொத்தமான ரூபா 750,000 வீட்டுத் திட்டத்திற்காக ரூபா 250,000 வீதம் 03 கட்டங்களின் கீழ் பணம் விடுவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க காணியின் சட்ட ரீதியான உரிமை மற்றும் ஒவ்வொரு கட்டத்தின் நிர்மாண வேலைகளின் செயல்முன்னேற்றத்தினை உறுதிப்படுத்தியதன்

	வரையும் உரிய வீட்டின் நிர்மாண வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. பெரிய அளவில் அத்திவாரமிடப்பட்டு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக நிர்மாண வேலைகளை முடிவு செய்வதற்கு முடியாமல் இருந்தது. மேலும் உரிய வீடு நிர்மாணிக்கப்பட்ட காணியானது வீட்டு நலனாளியின் சட்டரீதியான உரிமையுள்ள ஒரு காணியாக இருக்கவில்லை.	பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்திலும் வீட்டின் வேலைகள் முடிவு செய்யப்படுகின்ற முறைமைக்கு இணங்க 03 கட்டங்களில் பணத்தை விடுவிக்கும் சுற்றறிக்கையின் மூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தலைமை அலுவலகத்தின் மூலம் வீட்டிற்காக மாவட்டத்திற்கு பணம் வழங்கப்படுவதாவது வீடமைப்பு லொத்தர் நிதியத்தின் முதலீடுகள் முதிர்ச்சியடைந்ததன் பின்னர் கிடைக்கும் பணத்திலிருந்தாகும். வீட்டினை திறப்பதற்கு முன்னர் வேலைகள் முடிவு செய்யப்படும் என்ற எழுத்துமூல வாக்குறுதியுடனேயே அனைத்து தவணைப் பணங்களும் அவர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.	பின்னர் மாத்திரமே உரிய தவணைப் பணத்தை விடுவிப்பதற்கு முறையான கண்காணிப்பு நடைமுறை அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும்.
(ஈ)	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது இம்புல்பே பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 2,750,000 செலவு செய்து 05 வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் திருத்தம் செய்தல் மேற்கொள்ளப்பட்டது.		
(i)	2024 பெப்ரவரி 07 ஆந் திகதிய 2024/03 ஆம் இலக்க சமூர்த்தி சுற்றறிக்கையின் இலக்கம் 01- "நிகழ்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்துதலின் கீழ் வீட்டினை நிர்மாணிக்கும் போது பாரிய அளவில் அத்திவாரம் இடுவது தவிர்க்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தும் இரண்டு நலன்பெறுனர்களுக்கு ரூபா 750,000 வீதம் வழங்கப்பட்டிருந்தும் பாரிய அளவில் அத்திவாரம் இடப்பட்டதன் காரணமாக அந்த	ஒரு நலன்பெறுனர் ரூபா 750,000 ஒரு வீட்டுத்திட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்டதானது அவரின் மனைவி மற்றும் இரண்டு பெண்பிள்ளைகளுடன் மிகவும் துக்ககரமாக வாழ்ந்து கொண்டிருத்தல் மற்றும் சிறிய குடிசை வீட்டில் வாழ்வதன் காரணமாக பிரதேச செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. தற்பொழுது இந்த நலன்பெறுனர் மனைவி மற்றும் பிள்ளைகள்	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க வீட்டுத் திட்டங்கள் மற்றும் நிர்மாண வேலைகள் செயற்படுத்தப்படுகின்றது என உறுதிப்படுத்துவதற்கும் உதவிப் பணத்தை விடுவிப்பதற்கு முன்னர் உரிய கட்டத்தின் நிர்மாண வேலைகளின் செயல்முன்னேற்றம் போதியளவானது என உண்மைப்படுத்துவதற்கும் முறைப்படியான கண்காணிப்பு நடைமுறைகள்

	வீடுகளின் நிர்மாண நடவடிக்கைகள் அரைவாசியாக பூர்த்திசெய்யப்பட்டிருந்தன	வாழ்வதற்காக தேவையான வகையில் வீட்டின் கதவுகள், யன்னல்கள் போடப்பட்டு பிரதேச செயலாளரின் தலையீட்டுடன் வீட்டில் குடியிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றைய நலன் பெறுனருக்கு 2023 ஆம் ஆண்டில் ரூபா 750,000 வீட்டுத் திட்டத்திற்காக பணம் விடுவிக்கப்பட்டுள்ளது. அவரின் குடும்பத்தில் நலன்பெறுனர் மற்றும் கணவருடன் இரண்டு பிள்ளைகளாகும். அந்த வீட்டிற்காக வழங்கப்பட்ட ரூபா 750,000 பெறுமதிக்கு மேற்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட ஒரு வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. பழைய தற்காலிக குடிசை வீடானது சமயலறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய சமையலறைக்குரிய செயற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.	அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும்.
(ii)	மேற்கூறிய நலன்பெறுனர்களுக்கு மத்தியில் இன்னும் ஒரு நலன்பெறுனருக்கு ஒரு வீட்டினை நிர்மாணிப்பதற்காக ரூபா 750,000 வழங்கப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க இறுதிக் கட்டத்தின் கீழ் ரூபா 250,000 பணத்தினை விடுவிப்பதற்கு முன்னர் வீட்டின் அனைத்து நிர்மாண வேலைகளையும் முடிவுசெய்து இறுதி அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும்	விசேட வீட்டு நிகழ்சித்திட்டத்தின் கீழ் ரூபா 750,000 வீட்டிற்காக தெரிவு செய்யப்பட்டதானது 2024/03 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்கவாகும். வீட்டின் நிர்மாண வேலைகளுக்காக தவணைப்பணம் விடுவிக்கப்பட்டுள்ள முறைமையில் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அவரின் நீவிர நோய் நிலைமையினால் முடிவு செய்வதற்கு முடியாதிருந்தது என விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நிர்மாண வேலைகளின் செயல்முன்னேற்றத்தினை உறுதிப்படுத்தி கொடுப்பனவு செய்வதற்கும் போதியளவு கண்காணிப்பு நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வீட்டின் நிர்மாண வேலைகள் முடிவடையாதிருந்தும் ரூபா 50,000 இனை மாத்திரம் நிறுத்திவைத்து மிகுதிப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பாரிய அளவிலான அத்திவாரம் இடப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற செுற்றறிக்கை அறிவுறுத்தல் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.	நலன்பெறுனரின் இந்த நிலைமையின் காரணமாக வீட்டின் நிர்மாண நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதனால் அடுத்துவரும் 02 மாதங்களுக்குள் வீட்டின் நிர்மாண வேலைகளை முடிவுசெய்து குடியிருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

3.3 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2024 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.1.1(அ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டு தொடர்பாக நிதியத்தினால் ஒரு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.	2025 ஆம் ஆண்டில் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அதற்கான காரணம் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான ஒரு தேவைப்பாடு இல்லாமையாகும். எனினும் பிரிவில் ஒரு ஆண்டு காலமாக புகைப்பட பிரதி இயந்திரம் அடிக்கடி செயற்டாதிருக்கும் ஆபத்தான நிலைமை காணப்பட்டது. படிப்படியாக அது செயற்டாதிருந்ததனால் வீடமைப்பு லொத்தருக்கு பொறுப்பான சபைக்கு உரிய பத்திரத்தினை தயாரிப்பது தொடர்பாக பிரச்சினை உருவாகியுள்ளது. நிதி ஏற்பாட்டினை கவனித்துப் பார்ப்பதற்கு ஏனைய மூலங்கள் இல்லாததனாலும் இந்த நிதியத்திற்காக ஒரு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படாததனாலும் இக்கொள்வனவுகள் பெறுகை உபாயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.	வருடாந்த பெறுகை தேவைப்பாடுகளை ஆரம்பத்திலேயே அடையாளங்கண்டு 2024 பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஒரு பெறுகைத் திட்டத்தினை தயாரித்து அத்திட்டத்திற்கு இணங்க பெறுகை செயற்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணத்தின் 877(1)(இ) ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக தயாரித்த பாதீடு அமைச்சு செயலாளரின்	2025 ஆம் ஆண்டிற்காக தயாரித்த பாதீடு அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஒக்தோபர் 23 ஆந் திகதிய mwca/acc/11/01/2024 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அதற்காக அமைச்சு	பாதீடு நிர்ணயிக்கப்பட்டவாறு உரிய அங்கீகாரத்தினைப் பெற்று பொதுத்திறைசேரிக்கு அனுப்பிவைப்பதற்கும்

	அங்கீகாரத்துடன் பொதுத்திறைசேரியின் அங்கீகாரத்திற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அதன் பிரதி அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	செயலாளரின் சிபாரிசுடன் அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.	அது சம்பந்தமான ஆவணங்களை முறைப்படியாக பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2025 ஆகஸ்ட் 07 ஆந் திகதி சான்றுபடுத்தப்பட்ட பாதீடானது நிதியத்தின் லொத்தர் சீட்டிழுப்பு நிகழ்சித்திட்டம் நிறுத்தப்பட்டதன் பின்னர் தயாரிக்கப்பட்டிருந்தும் சீட்டிழுப்பு நடவடிக்கைகள் தொடர்பான உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள் மூலதனச் செலவுகள் மற்றும் அபிவிருத்தி உதவிக்காக ரூபா 2,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க தற்பொழுது நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிகழ்சித்திட்டத்திற்காக நிதி ஏற்பாடு பாதீடு செய்யப்பட்டதன் மூலம் பாதீடானது வளங்களின் தேவைப்பாடு மற்றும் எதிர்பார்த்த செலவுகளை சரியாக அடையாளம் காண்பதற்காக வினைத்திறனான நிதி திட்டமிடல் மற்றும் கட்டுப்பாட்டு கருவியாக போதியளவில் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கபட்டது.	முன்னைய ஆண்டுகளைப் போல 2025 ஆம் ஆண்டின் போதும் வீடமைப்பு லொத்தர் சீட்டிழுப்பு நிகழ்சித்திட்டத்தினை நடாத்துவதற்கான இயலுமை உள்ளது என எதிர்பார்த்து பாதீடும் அமுல்ப்படுத்தல் திட்டமும் தயாரிக்கப்பட்டது. உடன்படிக்கை செய்த சேவைகளின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் பிரசித்தப்படுத்தல் செலவுகள் போன்ற தேவையான சந்தர்ப்பங்களில் சில நிகழ்சித்திட்டத்தை பிரசித்தப்படுத்தி இதன் நிலைமையை சமூகத்திற்கு தொலைக்காட்சி பிரசித்தப்படுத்தலின் மூலம் அல்லது பத்திரிகைகளின் மூலம் விடயங்களை வெளிப்படுத்துவதற்காக வைக்கப்பட்ட பணமாகும். மேலும் மென்பொருள் அபிவிருத்தி உதவியாளர்களாக கணனி நிகழ்சித்திட்டங்களை தயாரித்தல் மற்றும் மொடியூலை அபிவிருத்தி செய்வதற்காக மாவட்ட மட்டத்தில் வீடமைப்பு தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ஆண்டில் தேவைப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை.	அடுத்துவரும் ஆண்டில் பாதீட்டினைத் தயாரிக்கும் போது மிகவும் நடைமுறைச் சாத்தியமாகத் தயாரிப்பதாற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.